

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், நாகர்கோவில், ஸ்காட் கிறிஸ்தவக் கல்லூரியில்
மாவட்ட அளவிலான அறிவியல் கண்காட்சியினை இன்று (11.01.2017) துவக்கி வைத்து, பார்வையிட்டார்கள்.
மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திருமதி. கே.விஜயராணி உடனுள்ளார்.

செ.வெ.எண்: 31/2017 நாள்: 11.01.2017

**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், நாகர்கோவில், ஸ்காட் கிறிஸ்தவக் கல்லூரியில் மாவட்ட அளவிலான அறிவியல் கண்காட்சியினை துவக்கி வைத்து, பார்வையிட்டார்கள்.**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், நாகர்கோவில், ஸ்காட் கிறிஸ்தவக் கல்லூரியில் மாவட்ட அளவிலான அறிவியல் கண்காட்சியினை இன்று (11.01.2017) துவக்கி வைத்து, பார்வையிட்டார்கள்.

மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், கண்காட்சியினை துவக்கி வைத்து தெரிவித்ததாவது:-

அன்றாட வாழ்வில் அறிவியல் என்பது பள்ளி சார்ந்ததாக இருக்க வேண்டும். இன்று மாணவர்கள் படைத்துள்ள ஒவ்வொரு அறிவியில் மாதிரிகளும் பயன்பாட்டு வாழ்விற்கு ஏற்றவாறு மாறக்கூடிய வகையில் அது ஒரு ரொபோ ஆகவோ, புதுயுக்திகள் கொண்ட செல்லிடப்பேசியாகவோ, தொலைக்காட்சி பெட்டியாகவோ பல்வேறு அறிவியல் மாற்றங்களோடு, தினசரி வாழ்வில் பயன்படத் தக்கவகையில் மாற வேண்டும். அதற்கு ஆசிரியர்களின் சிறந்த வழிகாட்டுதலோடு தங்கள் அறிவியல் சிந்தனைகளை மேம்படுத்தி, அறிவியலில் புதிய மாற்றத்தை உருவாக்க வேண்டும். அவ்வாறு புதிய சிந்தனைகள் உருவாக்கத்தால் தான் இன்றைய மனிதனின் முயற்சி மருத்துவத்துறை, வானியல் மற்றும் உயிரியல் தொழில்நுட்பம், டி.என்.ஏ வரை சாதனைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

எனவே மாணவ, மாணவியர்கள் அறிவியல் மற்றும் கணிதவியலில் உள்ள தோற்றங்கள், தத்துவங்களை படிப்பதோடு மட்டும் நிறுத்திக் கொள்ளாமல், நம் வாழ்வியலோடு சேர்த்துக் கொண்டு முன்னேற வேண்டும். இன்றைய சிறு படைப்புக்கள் நாளை வெளிச்சத்திற்கு வரும்போது கணித மாமேதை, அறிவியல் விஞ்ஞானி, மருத்துவர், பொறியாளர் இவ்வாறு பலதரப்பட்ட பணிகளில் பணியாற்றிட முடியும். உதாரணத்திற்கு மறைந்த முன்னாள் குடியரசு தலைவர் திரு. அப்துல்கலாமை எடுத்துக்கொண்டாலே போதுமானதாகும்.

இன்று நடைபெறும் மாவட்ட அளவிலான கண்காட்சியில் அரசு பள்ளிகளில் பயிலும் 83 பள்ளிகளை சார்ந்த மாணவ, மாணவியர்கள் மற்றும் ஆசிரியர்கள் கலந்து கொண்டுள்ளனர். இக்கண்காட்சியானது இன்றும் (11.01.2017) நாளையும் (12.01.2017) இதே கல்லூரியில் நடைபெறும்.

இக்கண்காட்சி மூலம் மாணவ, மாணவியர்களிடையே ஆக்கப்பூர்வமான அறிவியல் சிந்தனைகளை உருவாக்குவது மட்டுமல்லாமல், வளமான இந்தியாவை உருவாக்க கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள மாணவ செல்வங்கள் முன்வர வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

இக்கண்காட்சியில் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர் திருமதி. கே.விஜயராணி, உதவி மாவட்ட திட்ட ஒருங்கிணைப்பாளர் திரு. எம்.ஜாண் ஜெரோம் மிலாடு, மாவட்ட கல்வி அலுவலர்கள் திரு. பி. நடராஜன், திரு. வி.எம்.எம். சாமுவேல், ஸ்காட் கிறிஸ்தவக்கல்லூரி முதல்வர் முனைவர் எட்வின் ஞானதாஸ், பள்ளி ஆசிரியர்கள் மற்றும் மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.